Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)

In the court of Judicial Magistrate No.II, Tindivanam.

CASE NO. STC. 335/2024

Prosecution witness – PW – 1

| | | | |
|---|---|---|---|
| Date | 11.05.2026 | Taluka. | |
| Name | சுரேஷ் | Calling | |
| Father/Husband Name | அய்யனார் | Age | 36 |
| Village/City | நகர் | | |

Complainant and Accused present.

<u>எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை</u>.

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் ITI முடித்துள்ளேன். புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எதிரி என்னுடன் படித்துள்ளாரா என்றால் இல்லை. நகர் கிராமத்தில் நான் எத்தனை வருடங்களாக வசித்து வருகிறேன் என்றால் நான் பிறந்ததிலிருந்து அங்கு தான் வசித்து வருகிறேன். நான் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு மரக்காணத்திற்கு சென்றேன் என்றால் பத்து ஆண்டுகளுக்கு முன்பு சென்றேன். மரக்காணத்தில் எனக்கு வாடகை வீடு தான் உள்ளது, சொந்த வீடு கிடையாது. எனது மனைவி குழந்தைகள் எங்கு வசித்து வருகிறார்கள் என்றால் மரக்காணத்தில் தான் வசித்து வருகிறார்கள். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாய வேலை செய்து வருகிறேன். நான் விவசாயம் தவிர்த்து வேறு எந்த வேலையும் செய்வதாக எனது புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் விவசாயம் செய்து வருவதாக முதல் விசாரணையிலோ வழக்கறிஞர் அறிவிப்பு புகாரிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லி உள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் மேற்படி விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2. எதிரி ரகு என்ன வேலை செய்து வருகிறார் என்று புகார் மனுவிலோ அல்லது வழக்கறிஞர் அறிவிப்பிலோ குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டு இருக்கும். என்னிடம் காட்டப்படும் புகாரில் அருள் பற்றி மேற்படி விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிரி ரகு எந்த தேதியில் என்னிடம் பணம் கேட்டார் என்றால் டிசம்பர் 2022 ஆம் ஆண்டு 25 ஆம் தேதி வாக்கில் கேட்டார். மேற்படி விபரத்தை

எனது புகார் மனுவிலோ வழக்கறிஞர் அறிவிப்பிலோ உள்ளதா என்றால் இல்லை. 2022–ல் எதிரி ரகுவை நீதிமன்ற காவலுக்கு போலீசார் உட்படுத்திய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி எத்தனை நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்தார் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 10.01.2023 ம் தேதியிலிருந்து பத்து நாட்களுக்கு முன்பு என்றால் 01.01.2023 என்றால் சரிதான். நான் பணம் கொடுத்த ஜனவரி மாதத்தில் எனக்கு எத்தனை வங்கி கணக்கு இருந்தது என்றால் மூன்று சேமிப்பு கணக்கு உள்ளது. முறுக்கேறி ஸ்டேட் பாங்க், மரக்காணத்தில் இந்தியன் பேங்க் மற்றும் சென்ட்ரல் பேங்க் ஆகும். 2023 ஜனவரி மாதம் முதல் வாரத்தில் எனது வங்கி கணக்குகளை பார்த்தால் என் வசம் எவ்வளவு தொகை இருந்தது என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான்.

3. எந்த இடத்தில் வைத்து பணம் வாங்கினார் என்ற விவரத்தை எனது வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எதிரி என்ன தொழில் அபிவிருத்திக்காக பணம் கேட்டார் என்ற விவரம் எனது புகார் மனு எனது பிரமாண வாக்குமூலம் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடப்படவில்லை என்றால் இல்லை. ஒருவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்று சொன்னால் தான் அது சட்டப்படியான தொழிலா அல்லது சட்டத்திற்கு புறம்பான தொழிலா என்பது தெரியவரும் என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தக்கூடிய நபரா என்றால் இல்லை. ரூபாய் 60 லட்சம் என்பது பெரிய தொகை என்றால் சரிதான். 1 அல்லது 2 லட்சம் தொகை கொடுத்தாலே ஆவணம் எழுதி வாங்கிக்கொண்டு கொடுப்பதுதான் வழக்கம் என்றால் சரிதான். தற்போது வரை நான் எத்தனை நபர்களிடம் இருந்து கடன் வாங்கினேன், எவ்வளவு வாங்கினேன் என்பதை பொறுத்து எனது புகார் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4. என் பேரில் சுமார் எவ்வளவு ஏக்கர் விவசாய நிலம் உள்ளது என்றால் நகர் கிராமத்தில் சுமார் இரண்டு ஏக்கர் உள்ளது. எனக்கு சொந்தமாக எத்தனை வீடுகள் உள்ளது என்றால் ஒரே ஒரு வீடு தான் உள்ளது. அதில் நான் மட்டும்தான் உள்ளேன். நான் வட்டிக்கு கொடுக்கும் தொழிலை எத்தனை ஆண்டுகளாக செய்து வருகிறேன் என்றால் நான் அந்த தொழில் செய்யவில்லை. வட்டிக்கு விடுவதற்கான லைசன்ஸ் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. எவ்வளவு வட்டிக்கு ரூபாய் 60 லட்சத்தை கொடுத்ததாக எனது புகார் மனுவில் சொல்லி உள்ளேன் என்றால் வட்டி எதுவும் சொல்லவில்லை. அந்த தொகைக்கான வட்டியுடன் எதிரி திரும்ப கொடுப்பதாக சொன்னதாக எனது புகார் மனுவில் குறிப்பிட்டிருந்தால் அது தவறானது என்றால் சரிதான். தற்போது வரை எதிரி எனக்கு ஏதேனும் வட்டி கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. என்னுடைய குழந்தைகளின் படிப்பு செலவு மற்றும் தினசரி செலவுகளை விவசாய தொழிலில் இருந்து வரும் தொகை மூலமாக தான் பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். எனது நிலத்திற்கு விவசாய கடன் ஏதேனும் வாங்கி உள்ளேன் என்றால் இல்லை. அந்த நிலம் எனது அப்பா பெயரில் உள்ளதா அல்லது எனது

பெயரில் உள்ளதா என்றால் எனது பெயரில்தான் உள்ளது. நகர் கிராமத்தில் ரகு என்ற பெயரில் எத்தனை நபர்கள் இருக்கிறார்கள் என்றால் எதிரி ஒருவர் தான் இருக்கிறார்.

5. இந்த வழக்கின் காசோலையை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த காசோலையில் ஹோம் பிரான்சை தவிர்த்து மற்ற கிளைகளுக்கு ரூபாய் 10 லட்சம் மேல் அந்த காசோலைக்கு அதிகாரம் இல்லை( Valid upto 10 lakhs at non-home branch for non- cash transaction only) என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் காசோலையை ஹோம் பிரான்சில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் பகுதியில் ஹிஜாவு கம்பெனியில் ஒரு முறைகேடு நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அது மனைவியின் பெயர் விமலா ஆகும். எனது மனைவி விமலா ஹிஜாவு கம்பெனியில் ரூபாய் 2 லட்சம் முதலீடு செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஹிஜாவு கம்பெனி என்ற பெயரை தற்போது தான் நான் கேள்விப்படுகிறேன்.

6. எதிரி ரகு என்ன கம்பெனி என்று என்னிடம் சொன்னார் என்றால் ஆயில் கம்பெனி என்று சொன்னார். எதிரி ரகு மூலமாக ஆயுள் கம்பெனி என்று சொல்லப்படும் ஒரு கம்பெனியில் முதலீடு செய்துள்ளோம் என்றால் சரிதான். எத்தனை லட்சம் ரூபாய் முதலீடு செய்துள்ளேன் என்றால் 60 லட்சம் ரூபாய் முதலீடு செய்துள்ளேன். அந்த 60 லட்சம் தொகைக்கு தான் இந்த காசோலை என்றால் சரிதான். அந்த 60 லட்சம் தொகையை யாருடைய பெயரில் முதலீடு செய்தேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எனது மனைவிக்கு ஹிஜாவு கம்பெனியில் ஒரு ID எண் உள்ளது என்றாலும் அதை போட்டுப் பார்த்தால் விவரம் தெரியவரும் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி ரகுவிற்கு நான் அறிவிப்பு அனுப்பிய முகவரி எது என்றால் கதவு எண் தெரியாது, மேட்டு தெரு, நகர் என்று மட்டும் தெரியும். எனது அறிவிப்பு மேற்கு தெருவில் உள்ள ரகுவிற்கு தான் அனுப்பப்பட்டுள்ளதா என்றால் அவருக்கு தான் அனுப்பப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் திருப்பப்பட்ட அஞ்சலக உரையில் மேட்டு தெரு என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

//திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் மைக் மூலம் சொல்லப்பட்டு கணினியில் பதிவுசெய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்